**17. அடக்கம் அமரருள் உய்த்த கதை**

வெகு காலத்திற்கு முன்னர் வடநாட்டிலே யமுனையாற்றின் கரையிலே ஓரிடத்திலே அந்தணர் குலத்தில் தோன்றிய மூவர் அருந்தவம் புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய பெயர் சுபன், சங்கன், சாங்கன்



என வழங் கப்பெற்றன. இவர்கள் பன்னெடுங்காலம் விடாப்பிடியா கத் தவஞ்செய்த படியால், விண்ணுலகில் இருந்து விமானங் கள் மூன்று இவர்களைக் கொண்டுபோவதற்கு மண்ணுல கிற்கு வந்தன. தவத்தினர் மூவரும் தனித்தனியே அவ்விமானங் களில் ஏறியமர்ந்தனர். விமானங்கள் விண்ணை நோக்கி எழுந்தன. அப்பொழுது அவ்விடத்தில் ஒரு கருடன் ஒரு பாம்பைப் பற்றியது. அதனை மூவருங் கண்டனர். சங்கன் என்பவன் கருடனைப் பார்த்துக் "கருடா! பாம்பினை விட்டு விடுக" என்றுவிளம்பினான். கருடன் பாம்பை விட்டது. அதன் பயனாகச் சங்கனும் விமானத்தைவிட்டு மண்ணிலே விழுந்தான். பாம்பை விடச்சொன்னபடியால்தான் சங்கன் விமானத்திலிருந்து நிலத்தில் விழுந்தான் போலும் என்று சாங்கன்என்பவன் எண்ணினான். "கருடா! பாம்பினைப் யற்றுக" என்றான். அவ்வளவில் கருடன் மீண்டும் பாம் பினைப்பற்றியது. அக்குற்றத்தால் சாங்கனும் விமானத்தில் இருந்து கீழே விழுந்தான். அவன் பெற்ற நற்பதமும்தொலைந்தது. சுபன் என்பவன் இவைகளையெல்லாம் அமை தியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன்யாதும் உரை யாடவில்லை.உயிர்கள் யாவும் தத்தம் நல்வினை தீவினைகளுக் கேற்ப அவ்வவற்றின் பயனைநுகர்கின்றன என்று அவன் அறிந்திருந்தபடியால் யாதும் உரையாடாமல் அடக்கமாக இருந்தான். அவனுடையவிமானம் மட்டும் விண்ணுல் கத்தை அடைந்தது. அவனுந் தேவர்களில் ஒருவனாக அமர்ந்து இன்புற்றான். அடக்கம் உடைய தன்மை தேவர்களில் ஒருவனாக்கும்; அடக்கமில்லாத தன்மை நரகத்திலே கொண்டுபோய்ச்சேர்த்துவிடும் என்பது இவர்களால் எல்லோருக்கும் நன்கு விளங்கியது.

[அடக்கமுடைமை]